**கவனிக்க.**- 2007.03.23 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1491- 2007 මාර්තු 30 වැනි සිකුරාදා - 2007.03.30

*1491 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 282 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 284 |
| விலைக்கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 285 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டமூலம் 2007, பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) ஓலகங்கல மஹா சுதர்ஷன பரோபகாரி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2007, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) ஜப்பானிய மொழிக் கல்வி நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2007, பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, ஏப்பிறல் 05 ஆந் தேதி வியாழக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, மாச்சு 23 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2007 இன் இல. 110

**தேசிய மாணவ வீரர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு

2006, செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதியிலிருந்து தற்காலிக மேஜர் ஆக :

கப்டன் டப்ஜிஎஸ் பிரேமதிலக

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சி,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.

3-744

---

2007 இன் இல. 111

இல. : டீஆர்எவ்/824/என்வை/1/3.

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதல்

2006, மாச்சு மாதம் 13 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கொமாண்டர் (எஸ்எஸ்டீ) ஆக :

லெப்டினன்ட் (எஸ்எஸ்டீ) தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (எஸ்எஸ்டீ) ஹெட்டிஆரச்சிகே நிஷாந்த சஞ்ஜீவ பெரேரா, என்ஆர்எக்ஸ் 0858 இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ. பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, ஓகத்து 24.

03-832

2007 இன் இல. 112

இல. : டீஆர்எவ்/824/என்வை/1/03.

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதல்

2006, மாச்சு மாதம் 13 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கொமாண்டர் (பீஎச்) ஆக :

லெப்டினன்ட் (பீஎச்) தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (பீஎச்) கீகனகே சுஜீவ தேவிந்த வீரசூரிய, இகப

2006, மாச்சு மாதம் 13 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கொமாண்டர் (வ) ஆக :

லெப்டினன்ட் (வ) (தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (வ)) ஹேரத் முதியன்சேலாகே சமந்த பிரீத்தி குமார ஹேரத், இகப

2006 மாச்சு மாதம் 20 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கொமாண்டர் (வ) ஆக :

லெப்டினன்ட் (வ) (தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (வ)) மடகும்புரே முதியன்சேலாகே சிரி அநுருத்த கருணாதிலக்க, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ. பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, மே 15.

3-834

---

2007 இன் இல. 113

இல. : டீஆர்எவ்/824/என்வை/1/03.

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வுகள்

2006, ஏப்பிறல் மாதம் 1 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (மாலிமா) ஆக :

லெப்டினன்ட் (மாலிமா) எதிரிசிங்க ஆரச்சிகே இந்திக்க பிரசன்ன எதிரிசிங்க இகப என்ஆர்எக்ஸ் 0960

2006 ஏப்பிறல் மாதம் 4 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (மாலிமா) ஆக :

லெப்டினன்ட் (மாலிமா) ஜயசிங்க ஆரச்சிகே பிரசாத் சம்பிக்க ஜயசிங்க இகப என்ஆர்எக்ஸ் 0974

2006 ஏப்பிறல் மாதம் 9 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (மாலிமா) ஆக :

லெப்டினன்ட் (மாலிமா) ரஞ்சித் ஜயரத்ன வல்கம்பாய இகப என்ஆர்எக்ஸ் 0971

2006 ஏப்பிறல் மாதம் 9 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (சீடீஓ) ஆக :

லெப்டினன்ட் (சீடீஓ) கோணார முதியன்சேலாகே ருவன் தரங்க பண்டார இகப என்ஆர்எக்ஸ் 0973

2006 ஏப்பிறல் மாதம் 16 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (தொதா) ஆக :

லெப்டினன்ட் (தொதா) சமிந்த விபுலஜித் ரணவீர இகப என்ஆர்எக்ஸ் 0866

2. மேற் குறிப்பிட்ட பதவியுயர்வுகள் பரிசோதனை அடிப்படையில் ஆவதுடன், உயர்த்தப்பட்ட பதவியினை ஏற்பதற்கு தகுதியற்றவரெனத் தெரிந்து போனால் உத்தியோகத்தரினது பதவியுயர்வினை இரத்துச் செய்து மீண்டும் முன்னரிருந்த பதவிக்கு நியமிக்கப்படுவார்.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ. பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, மே 30.

3-833

---

2007 இன் இல. 114

இல. : டீஆர்எவ்/824/என்வை/1/03.

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்த்துதல்

2006, ஓகத்து மாதம் 2 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கொமாண்டர் (மி) ஆக :

லெப்டினன்ட் (மி) ரணசிங்க ராஜரத்னகே கமல் கீர்த்தி சுபசிங்க என்ஆர்எல் 0934 இகப.

2. மேற் குறிப்பிட்ட பதவியுயர்வுகள் பரிசோதனை அடிப்படையில் ஆவதுடன், உயர்த்தப்பட்ட பதவியினை ஏற்பதற்கு தகுதியற்றவரெனத் தெரிந்து போனால் உத்தியோகத்தரினது பதவியுயர்வினை இரத்துச் செய்து மீண்டும் முன்னரிருந்த பதவிக்கு நியமிக்கப்படுவார்.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ. பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, செத்தெம்பர் 29.

3-831

---

2007 இன் இல. 115

இல. : டீஆர்எவ்/824/என்வை/1/03.

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வுகள்

2006, நவெம்பர் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (மி) ஆக :

லெப்டினன்ட் (மி) லன்சக்கார ஜயசுந்தர முதியன்சேலாகே பண்டாரதிலக்க என்ஆர்எல் 0975 இகப

2006 நவெம்பர் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (மி) ஆக :

லெப்டினன்ட் (மி) ஆருகட்டு பட்டபந்திகே ராஜ் சந்திரலால் என்ஆர்எல் 0976 இகப

2006 நவெம்பர் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (எஸ்எச்) ஆக :

லெப்டினன்ட் (எஸ்எச்) ஹெட்டிஆரச்சிகே சேனக்க குமாரசிங்க என்ஆர்எச் 0977 இகப

2006 நவெம்பர் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் ஆக :

லெப்டினன்ட் இந்துநில் பிரியந்த இலேபெரும என்ஆர்எல் 0980 இகப

*2006 நவெம்பர் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (வ) ஆக :*

*லெப்டினன்ட் (வ) மாரசிங்க அச்சிலாகே கருணாதிலக்க என்ஆர்எஸ் 0981 இகப*

*2006 நவெம்பர் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (கவீ) ஆக :*

*லெப்டினன்ட் (கவீ) வீரவர்தன பத்திரன்னஹலாகே பாலித்த சிசிர குமார என்ஆர்பீ 0986 இகப*

*2006 நவெம்பர் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் ஆக :*

*லெப்டினன்ட் ரங்காதிபதிகே அன்ரனி வீரசிங்க என்ஆர்எஸ் 0988 இகப*

*2006 திசெம்பர் மாதம் 1 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (பொ) ஆக :*

*லெப்டினன்ட் (பொ) கப்புரு பண்டார ஆரச்சிகே தம்மிக்க சிரிவர்தன என்ஆர்ஈ 0932 இகப*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,*
*சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.*

*கொழும்பு,*
*2007, சனவரி 12.*

*03-835*

# அரசாங்க அறிவித்தல்கள்

**யாத்திரைகள் கட்டளைச் சட்டம்**

கொடபிடிய முஸ்லிம் உற்சவம்

*மாத்தறை மாவட்டதில் கொடபிடிய (போர்வை) கொடபிடிய முஹியத்தீன் முஸ்லிம் பள்ளிவாசலின் வருடாந்த கொண்டாட்டம் 2007 ஏப்பிறல் மாதம் 18 ஆந் திகதி ஆரம்பமாகி 29 ஆந் திகதி முடிவுறும் என்பதை (175 ஆம் அதிகாரம்) யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட 1954 சனவரி மாதம் 08 ஆந் திகதி இலக்கம் 10630 கொண்ட இலங்கை அரச வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் 03 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

*1954 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி இலக்கம் 10630 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை அரச வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மேற்கூறப்பட்ட காலப் பிரிவில் குறித்த ஒழுங்குவிதிகளின் கீழ் உபபிரிவில் விவரிக்கப்படுகின்ற "கந்தபுற துல" எல்லையில் அமுலாகும்.*

*பீ. ரணவீர,*
*பிரதேச செயலாளர்,*
*அதுரலிய பிரதேச செயலாளர் பிரிவு.*

*பிரதேச செயலகம்,*
*அதுரலிய.*
*2007, மார்ச் 09,*

*3- 766*

---

***1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, கடன் இணக்கக் கட்டளைச் சட்டம்***

*25 ஆம் 26 ஆம் பிரிவுகளின் கீழ் அறிவித்தல்*

*1941 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தினாலும் 1959 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1964 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1973 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்கக் கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ், அதற்கான அட்டவணையில் உள்ள விண்ணப்பத்திற்கெதிரே சுட்டிக் காட்டப்பட்டுள்ள கடன் கொடுத்தவருக்கும் கடனாளிக்கும் இடையில் இணக்கமொன்றினை ஏற்படுத்தும் முயற்சியை மேற்கொள்ள கடன் இணக்க சபை உத்தேசித்துள்ளது.*

*2. ஆதலின், சம்பந்தப்பட்ட கடன் கொடுத்தவரகள், சபையின் முன் தோற்றுமாறு அவர்கள் தேவைப்படுத்தப்பட்ட தேதிக்கு முன்னர் கீழ்க் கண்ட கடனாளிகளிடமிருந்து தங்களுக்கு வருமதியாகவுள்ள கடன்களின் விவரங்களை சபைக்கு கொடுத்துதவுமாறு மேற்படி கட்டளைச் சட்டத்தின் 25 (1), 26 (1) ஆகிய பிரிவுகளினது நியதிகளின்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.*

*என். டபிள்யூ. குணதாச,*
*செயலாளர்,*
*கடன் இணக்கச் சபைத் திணைக்களம்.*

*கடன் இணக்கச் சபைத் திணைக்களம்,*
*இல. 428, 11, வீர டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2007.03.14.*

**அட்டவணை**

| விண்ணப்ப இல. | கடனாளியின் பெயரும் முகவரியும் | கடன் கொடுத்தவரின் பெயரும் முகவரியும் |
|---|---|---|
| 1. 40490 | திருமதி ஏக்கநாயக்க பெலந்தகே நுவன் காமினி கொஸ்தா, 133, ஹொரபெ, றாகம. | திரு. போகஹவத்த ரத்னாகர ஆரச்சிகே பிரியந்த ரத்நாயக்க, கபுவத்த, பல்லெபத்த. |
| 2. 40491 | திருமதி ஆஷா நில்மினி கொட்டிகல, 373/10, நாகஹவெல வீதி, கொட்டிகாவத்த, முல்லேரியா புதிய நகரம். | திரு. நவகமுவகே அஜித் பிரேமலால், 368, ரதன்வத்த. நாகஹவெல வீதி, கொட்டிகாவத்தை, முல்லேரியா புதிய நகரம். |
| 3. 40493 | திருமதி வனசிங்க முதியன்சேலாகே இந்திராணி வனசிங்க, பாடசாலை மாவத்தை, இல. 123, சில்வத்கம, கலேவெல. | திரு. வனசிங்க வன்னிநாயக்க முதியன்சேலாகே அஸ்வெதகெதர அஸ்வெதகெதர சுரேஷ் புத்திக வனசிங்க, 134/ஏ, சில்வத்கம, கலேவெல. |
| 4. 40507 | திருமதி ஜாலஜ்ஜகே அனோமா மல்காந்தி பீரிஸ், இல. 114/35, டயஸ் பிளேஸ், பாணந்துறை. | திருமதி சருக்காலி மகா விதானகே இந்திராணி சில்வா, இல. 37, டயஸ் பிளேஸ், வலபல, பாணந்துறை. |

3-798

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**மக்கள் வங்கி-லக்கி பிளாஸா கிளை (331)**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 18.08.2006 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:

"நிஹால் சமரசூரிய மக்கள் வங்கியின் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு திருமதி டபிள்யூ. ஏ. ஆர். எஸ். அபேரத்ன அத்தாட்சிப்படுத்திய 28.07.2003 ஆந் திகதிகொண்ட 1097 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது மேற்படி 1097 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது ஒரு கோடியே முப்பது இலட்சத்து பதினெட்டாயிரத்து இருநூற்றொன்பது ரூபா பதினொரு சதம் (ரூ. 1,30,18,209.11) மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. ஆதலால் ஒரு கோடியே முப்பது இலட்சத்து பதினெட்டாயிரத்து இருநூற்றொன்பது ரூபா பதினொரு சதத்தையும் (ரூ. 1,30,18,209.11) ஒரு கோடியே முப்பது இலட்சத்து பதினெட்டாயிரத்து இருநூற்றொன்பது ரூபா பதினொரு சதத்தின் மீது (ரூ. 1,30,18,209.11) 04.05.2005 முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு பதினெட்டு சதவீதப்படி (18%) மேலும் வட்டியையும் விற்பனைச் செலவுகளையும் வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக மேற்படி 1097 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஈ. எஸ். ராமநாயக்க என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மேல் மாகாணம், கொழும்பு மாநகரசபை எல்லைகளுக்குட்பட்ட கிருல 41 ஆம் வட்டாரம், நாரஹென்பிட்டி, சித்ரா ஒழுங்கையில் அமைந்துள்ளதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் யூ. என். பி. விஜேவீர தயாரித்த 11.11.1981 ஆந் திகதிகொண்ட 282 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு முழுவதும் அதன்மீது

அமைந்துள்ள அனைத்தையும் சேர்த்து. இதற்கு எல்லைகளாக- வடக்கில் : துண்டு 1 மற்றும் சித்ரா ஒழுங்கை, 56 ஆம் வரிமதிப்பீட்டிலக்க வளவுகள் ; கிழக்கில் : பைவ் வீதி, 49/19, 49/18 மற்றும் 49/16 என்னும் வரிமதிப்பீட்டிலக்கங்கள் ; தெற்கில் : சித்ரா ஒழுங்கை, 18/10, 18/9 மற்றும் 46 என்னும் வரிமதிப்பீட்டிலக்கங்கள் ; மேற்கில் : துண்டு 1 மற்றும் சித்ரா ஒழுங்கை என்பன அமைந்துள்ளன. இதன் பரப்பளவு இருபத்தெட்டு தசம் இரண்டு ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 28.25பே.). இது கொழும்பு காணிப்பதிவகத்தில் வீ/எவ் ஏ 984/212 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

உதவிப் பொது முகாமையாளர்,
(மேற்கு வலயம் 01).

மக்கள் வங்கி,
வலயத் தலைமையலுவலகம் (மேற்கு வலயம் 01),
இல. 11, டியூக் வீதி,
கொழும்பு 01.

3-823

---

## மக்கள் வங்கி-யக்கல கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழான தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2007.01.26 ஆந் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறியத்தரப்படுகின்றது :-

"கம்பஹா பிரசித்த நொத்தாரிசு எஸ். பீ. எல். விஜேசிரிவர்தன அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005.10.26 ஆந் திகதி கொண்ட 10526 ஆம் இலக்க ஈட்டுமுறியின் பிரகாரம் வருமதியான கொடுப்பனவில் மளுகே பிரியன்த டயஸ் என்பவர் தவணை தவறியுள்ளமையாலும் குறிப்பிட்ட ஈட்டுமுறியின்கீழ் தற்போது நான்கு இலட்சத்து இருபத்திமூவாயிரத்து இருநூற்றி முப்பத்திரண்டு ரூபா நாற்பத்திநான்கு சதம் (ரூபா 4,23,232.44) பணத்தொகை தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாக சேர வேண்டியுள்ளது. மேலும் நான்கு இலட்சத்து இருபத்திமூவாயிரத்து இருநூற்றி முப்பத்திரண்டு ரூபா நாற்பத்திநான்கு சதம் (ரூபா 4,23,232.44) பணத்தொகைக்காக 2005.12.03 ஆந் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதிவரை வருடாந்தம் 16.75% வட்டியும் மேலும் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 எல் பிரிவின் பிரகாரம் அறவிடப்படவேண்டிய பணங்களும் கட்டணங்களும் மேலும் ஏதாவது கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவை நீங்கலாக குறிப்பிட்ட நான்கு இலட்சத்து இருபத்திமூவாயிரத்து இருநூற்றி முப்பத்திரண்டு ரூபா நாற்பத்திநான்கு சதம் (ரூபா 4,23,232.44) பணத்தொகையை அறவிடுவதற்கு கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர் சொக்மன் மற்றும் சமரவிக்ரம அவர்களால் குறிப்பிட்ட இல. 10526 ஈட்டுமுறியின்கீழ் குறிப்பிட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனமும் வளவும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கிறது."

### ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோறளை, மெதபத்து, கம்பஹா பிரதேச சபையின் யக்கல பிரதேச சபை உப காரியாலய எல்லைக்குள் பதுவதுகொட எனும் இடத்தில் அமைந்துள்ள துனுமடலகஹவத்த எனும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஏ. பீ. ஏ. ரஞ்சித் அவர்களால் 1996.11.30 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல. 63 வரைபடத்தின் லொட் இல. 01 காணித்துண்டின் எல்லைகளாக- வடக்கில் : வரைபட இல. 36 ஏ/55 லொட் 3சீ இன் மிகுதித் துண்டும் ; கிழக்கில் : கே. பீ. எட்வின் என்பவருக்கு உரித்தான காணியும் மற்றும் கே. பீ. தியானிஸ் என்பவரின் உரிமையாளர்களுக்கு சொந்தமான காணியும் ; தெற்கில் : பாதை மற்றும் எச். பீ. மேரி என்பவரின் காணியும் ; மேற்கில் : வரைபட இல. 36 ஏ/55 லொட் 03பீ இன் மிகுதிக் காணியும் ஆகியன எல்லைகளாக அமைந்த இருபத்திரண்டு தசம் ஒன்று இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 22.12பே.) விசாலமான காணியும் அதன்கண் அமைந்துள்ள விவசாய கட்டிட பொருட்கள் சகலதுமாகும்.

இந்தக் காணி கம்பஹா காணிப்பதிவகத்தில் இல. ஏ514/200 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட காணித்துண்டின் பாதைக்காக ஒதுக்கப்பட்ட பகுதியின் பாதை உரித்துகளும் உள்ளடங்கும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்.
கம்பஹா.

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம் (மேற்கு III),
131, கண்டி வீதி,
பெலும்மஹர,
முதுன்கொடை.

3-824

---

## மக்கள் வங்கி - கெஹெல்வத்தை கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 2004.03.31 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:

"மிரிஹான ஆராச்சிகே திலகா கமலாவதி பெரேரா மக்கள் வங்கியின் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ.

டீ. ரம்யமாலா மெண்டிஸ் அத்தாட்சிப்படுத்திய 04.04.2003 ஆந் திகதிகொண்ட 1602 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது மேற்படி 1602 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது ஏழு இலட்சத்து தொண்ணூற்றிநான்காயிரத்து நூற்றிப்பன்னிரண்டு ரூபா தொண்ணூற்றிநான்கு சதம் (ரூ. 7,94,112.94) மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. ஆதலால் ஏழு இலட்சத்து தொண்ணூற்றிநான்காயிரத்து நூற்றிப்பன்னிரண்டு ரூபா தொண்ணூற்றிநான்கு சதத்தையும் (ரூ. 7,94,112.94) ஏழு இலட்சத்து தொண்ணூற்றிநான்காயிரத்து நூற்றிப்பன்னிரண்டு ரூபா தொண்ணூற்றிநான்கு சதத்தின் மீது (ரூ. 7,94,112.94) 29.06.2003 முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு பதினெட்டு தசம் ஐந்து (18.5%) சதவீதப்படி மேலும் வட்டியையும் விற்பனைச் செலவுகளையும் வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக மேற்படி 1602 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் "ரி. அன்ட் எச். ஆக்ஷனியர்ஸ்" நிறுவனத்தால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சியனே கோறளை, அதிகாரிபற்று, களனி பட்டினசபை எல்லைகளுக்குட்பட்ட கோணவல கிராமத்தில் அமைந்துள்ளதும் கோங்கஹாவத்த எனவும் தற்பொழுது "லெஸ்மலன்" எனவும் அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. பி. டீ சில்வா தயாரித்த 20.11.1985 ஆந் திகதிகொண்ட 161 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 22 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்மீது அமைந்துள்ள கட்டிடங்கள், பயிர்ச்செய்கைகள் மேற்படி ஆதனத்தில் நிரந்தரமாகப் பொருத்தப்பட்டுள்ள பொறித்தொகுதிகள், இணைப்புகள் மற்றும் அதன்கண் அமைந்துள்ள அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 22 என்பதற்கு எல்லைகளாக- வடக்கில் : துண்டு 21 ; கிழக்கில் : அதன் துண்டுகள் 15, 16 ; தெற்கில் : சிறிய பாதை ; மேற்கில் : இதன் துண்டு 46 என்பன அமைந்துள்ளன. இதன் பரப்பளவு ஒரு ஏக்கர் பதினைந்து தசம் நாலு பேர்ச்சஸ் (1ஏ. 0றூ. 15.4பே.) இது கொழும்பு காணிப்பதிவகத்தில் சீ 466/69 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்படி 161 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள துண்டுகள் 46, 44, 45, 48, (வீதிக்கென ஒதுக்கப்பட்டது) என்பன மீதும் அதன் வழியாகவும் வழியுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

உதவிப் பொது முகாமையாளர்,
(மேற்கு வலயம் 01).

மக்கள் வங்கி,
(மேற்கு வலயம் 01),
இல. 11, டியூக் வீதி,
கொழும்பு 01.

3-825

## மக்கள் வங்கி-யக்கல கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழான தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2007.01.26 ஆந் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறியத்தரப்படுகின்றது :-

"கம்பஹா பிரசித்த நொத்தாரிசு எஸ். பீ. எல். விஜேசிரிவர்தன அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1999.08.17 ஆந் திகதி கொண்ட 4193 மற்றும் 2004.01.30 ஆந் திகதி கொண்ட இல. 8910 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் பிரகாரம் வருமதியான கொடுப்பனவில் கஹவிட அப்புஹாமிலாகே தொன் அசின்தா கஹவிட மற்றும் கஹவிட அப்புஹாமிலாகே தொன் ஜயந்த கஹவிட அல்லது கஹவிட அப்புஹாமிலாகே தொன் ஜயந்த என்பவர்கள் தவணை தவறியுள்ளமையாலும் குறிப்பிட்ட ஈட்டுமுறியின்கீழ் தற்போது இரண்டு இலட்சத்து நாற்பத்தோராயிரத்து அறுநூற்றிப்பதினைந்து ரூபா (ரூ. 2,41,615) மற்றும் இரண்டு இலட்சம் ரூபா (ரூ. 2,00,000) பணத்தொகை தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாக சேரவேண்டியுள்ளது. மேலும் இரண்டு இலட்சத்து நாற்பத்தோராயிரத்து அறுநூற்றிப்பதினைந்து ரூபா (ரூ. 2,41,615) பணத்தொகைக்காக 2005.02.11 ஆந் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதிவரை வருடாந்தம் 26.5% வட்டியும் மற்றும் இரண்டு இலட்சம் ரூபா (ரூ. 2,00,000) பணத்தொகைக்காக 2006.03.01 ஆந் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதிவரை வருடாந்தம் 19.25% வட்டியும் மேலும் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 எல் பிரிவின் பிரகாரம் அறவிடப்படவேண்டிய பணங்களும் கட்டணங்களும் மேலும் ஏதாவது கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவை நீங்கலாக குறிப்பிட்ட இரண்டு இலட்சத்து நாற்பத்தோராயிரத்து அறுநூற்றிப்பதினைந்து ரூபா (ரூ. 2,41,615) மற்றும் இரண்டு இலட்சம் ரூபா (ரூ. 2,00,000) பணத்தொகையை அறவிடுவதற்கு கொழும்பு உத்தரவு பெற்ற ஏலதாரர் ஈ. எஸ். இராமநாயக்க அவர்களால் குறிப்பிட்ட இல. 4193 மற்றும் 8910 ஈட்டுமுறிகளின்கீழ் குறிப்பிட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனமும் வளவும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தின் விவரணம்

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோறளை, மெத பத்துவ, அலுத்கம, போகமுவ தற்போது யக்கல எனும் கிராமத்தில் அமைந்துள்ள லுய்சா எஸ்டேட் எனும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. பீ. என். ஜயசுந்தர அவர்களால் 1993.03.13 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல. 1143 வரைபடத்தின் லொட் இல. 8 காணித்துண்டின் எல்லைகளாக- வடகிழக்கில் : லொட் 34 உம் ; தென்கிழக்கில் : லொட் 32 உம் ; தென்மேற்கில் : லொட் 9 மற்றும் 10 உம் ; வடமேற்கில் : லொட் 7 உம் ஆகியன எல்லைகளாக அமைந்த

இருபத்தேழு தசம் இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 27.2பே.) விசாலமான காணியும் அதன்கண் அமைந்துள்ள விவசாய கட்டிட பொருட்கள் சகலதுமாகும்.

இந்தக் காணி கம்பஹா காணிப்பதிவகத்தில் இல. ஈ696/ 190 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட காணிக்கு போக்குவரத்திற்காக உத்தரவுபெற்ற நில அளவையாளர் என். எஸ். எல். பிரனாந்து அவர்களால் 1972.08.03 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல. 1213 வரைபடத்தின் இல. 32, 33, 34 மற்றும் 35 காணித்துண்டுகளின் பாதை உரித்துகளும் உள்ளடங்கும்.

இந்தக் காணி கம்பஹா காணிப்பதிவகத்தில் முறையே இல. ஈ.669/ 208, ஈ.731/ 177, ஈ 520/276 மற்றும் ஈ568/ 253 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்.
கம்பஹா.

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான காரியாலயம் (மேற்கு III),
131, கண்டி வீதி,
பெலும்மஹர,
முதுன்கொட.

3-826

---

### பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் இவ்வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

(கொட்டாஞ்சேனை கிளை) - *வாடிக்கையாளரின் பெயர் :* High Grow Exports (Private) Limited

2006, திசெம்பர் 27 ஆந் திகதியன்று நடைபெற்ற பான் ஏசியா பாங்கிங் கோர்ப்பரேஷன் லிமிட்டெட்டின் பணிப்பாளர்கள் சபையின் கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப் பட்டது :-

"முன்னர் பான் எசியா பாங்க் லிமிட்டெட் என்று அழைக்கப்பட்ட பான் ஏசியா பாங்கிங் கோர்ப்பரேஷன் லிமிட்டெட் சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என் ஆர். ஹேவாதந்திரியினால் சான்றொப்பிடப்பட்ட 2006,யூலை 25 ஆந் திகதியிட்ட 1045 ஆம் இலக்க அடைமான பிணை மீதான கொடுப்பனவை High Grow Lanka (Private) Limited செலுத்தத் தவறியுள்ளது,

இதன்படி தற்போது பான் ஏசியா பாங்கிங் லிமிட்டெடுக்கு (இதன் பின் சில சமயங்களில் "PABC வங்கி" என அழைக்கப்படுகிறது) முப்பத்தி மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் (ரூபா 33,50,000) ரூபாவின் மீது ஆண்டு ஒன்றுக்கு இருபத்திரண்டு சதவீத (22%) வட்டி வீதத்தில் குறித்த பிணை மீதான கொடுப்பனவுத் திகதி வரை 2006,நவெம்பர் 21 ஆந் திகதி வரை முதலும் வட்டியுமாக முப்பத்து நாலு இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து முந்நூற்று தொண்ணூற்றிரெண்டு ரூபா அறுபத்தி மூன்று சதம் (ரூபா 34,46,392.63) 2006, நவெம்பர் 22 ஆந் திகதியில் இருந்து செலுத்த வேண்டியுள்ளது. இது தொடர்பாக இவ்வாறு தீர்மானிக்கப் பட்டுள்ளது :-

வங்கிகளால் கடன்களை மீளப்பெறுதல் (விசேட ஏற்பாடுகள்) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் 4 ஆம் பிரிவின் நிபந்தனைகளுக்கு அமைய இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்பட்டவாறு குறிப்பிடப்பட்ட 1045 ஆம் இலக்க பிணை மீது வட்டியுடன் செலுத்த வேண்டிய குறிப்பிடப்பட்ட தொகையான முப்பத்து நாலு இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து முந்நூற்று தொண்ணூற்றிரெண்டு ரூபா அறுபத்தி மூன்று சதம் (ரூபா 34,46,392.63) மீளப் பெறுவதற்காக PABC வங்கிக்கு அடைமானம் வைக்கப்பட்ட சொத்தை பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்வதற்கு கண்டி, டொரிங்டன் வீதி, 24 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ஏல விற்பனையாளர்களான திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரம நிறுவனத்தினருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. முன் சொல்லப்பட்டவாறு 2006, நவெம்பர் 22 ஆந் திகதியில் இருந்து இதுநாள்வரை இதற்கான விற்பனை மற்றும் செலவுத் தொகை மற்றும் பணம் ஆகியவற்றை 1990 ஆம் ஆண்டின் வங்கிகளினால் கடன்கள் மீளப்பெறுதல் (விசேட ஏற்பாடுகள் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் மீளப் பெறும் வகையில் இதன் மூலம் நடவடிக்கை மேற் கொள்ளப்படுகிறது."

#### அட்டவணை

மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில் ராயிகம் கோறளையின் உடகஹாபத்து பகுதியில் ஹொரணை பிரதேச சபை எல்லைகளுக்குள்ளான சுரகாவில கிராமத்தில் அமைந்துள்ள "ஹிங்குரான்ஹேன" என்றழைக்கப்படும் நிலப்பகுதியின் அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஜே. சோமசிறியினால் ஆக்கப்பட்ட 2000, யூலை 30 ஆம் திகதியிடப்பட்ட 870 ஆம் இலக்க வரைபடத்தில் எல்லை பிரிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட காணிப்பங்கீடு Lot 1 என்ற நிலத் தொகுதியாக குறிக்கப்பட்டுள்ளது. Lot 1 என்று குறிக்கப்பட்ட குறிப்பிட்ட இப் பங்கீட்டு நிலத்தின் எல்லைகளாக - வடக்கு : அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஜே. சோமசிறியினால் ஆக்கப்பட்ட 1997, யூலை 20 ஆந் திகதியிட்ட 492 ஆம் இலக்க வரைபடத்தில் 1, 2, 3 மற்றும் 4 ஆம் இலக்க நிலத் தொகுதிகள் உள்ளன இப்பங்கீடு நிலத்தின் ; கிழக்கு : எல்லையில் பிற்ற எலவும் ; தெற்கு ; ஜே. டி. சுமண சிறியாலும் மற்றவர்களாலும் உரிமை கோரப்படும் ஹிங்குரான்ஹேன நிலத்தொகுதியும் ; மேற்கு : எல்லையில் முன்னர் முடிக்குரிய நிலமாக இருந்து தற்போது கே. ஏ. அனுரா என்பவருக்கு உரியதாக உள்ள நிலத்தொகுதியும் அமைந்துள்ளன. இப்பங்கீட்டு நிலம் ஒரு ஏக்கர் ஒரு றூட் முப்பத்தொன்பது தசம் ஒன்பது சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 39.90பே.) நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. குறிப்பிடப்பட்ட 492 ஆம் இலக்க வரைபடத்தில் 6, 7 மற்றும் 4 ஆம் இலக்க நிலத்தொகுதிகள் மீதான வழிகள் உரிமை.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

டி. வருணி எகொடகே,
முகாமையாளர் - சட்டத்துறை.

3-827/1

### பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் இவ்வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் மேற் கொள்ளப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

(கொட்டாஞ்சேனை கிளை) - வாடிக்கையாளரின் பெயர் : ஆனந்த கத்ரிஆரச்சி

2006, திசெம்பர் 27 ஆந் திகதியன்று நடைபெற்ற பான் ஏசியா பாங்கிங் கோர்ப்பரேஷன் லிமிட்டெட்டின் பணிப்பாளர்கள் சபையின் கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது :-

"முன்னர் பான் எசியா பாங்க் லிமிட்டெட் என்று அழைக்கப்பட்ட பான் ஏசியா பாங்கிங் கோர்ப்பரேஷன் லிமிட்டெட் சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். ஆர். ஹேவாதந்திரியினால் சான்றொப்பமிடப்பட்ட 2006,யூலை 25 ஆந் திகதியிட்ட 1047 ஆம் இலக்க அடைமான பிணை மீதான கொடுப்பனவை ஆனந்த கத்ரிஆராச்சி செலுத்தத் தவறியுள்ளார்,

இதன்படி தற்போது பான் ஏசியா பாங்கிங் லிமிட்டெட்டுக்கு (இதன் பின் சில சயங்களில் "PABC" வங்கி என அழைக்கப்படுகிறது) முப்பத்தி மூன்று இலட்சத்து இருபத்தையாயிரம் (ரூபா 33,25,000) ரூபாவின் மீது ஆண்டு ஒன்றுக்கு இருபத்திரண்டு சதவீத (22%) வட்டி வீதத்தில் குறித்த பிணை மீதான கொடுப்பனவுத் திகதி வரை 2006,நவெம்பர் 21 ஆந் திகதி வரை முதலும் வட்டியுமாக முப்பத்து நாலு இலட்சத்து இருபதாயிரத்து அறுநூற்றி எழுபத்து மூன்று ரூபா அறுபத்தி மூன்று சதம் (ரூபா 34,20,673.63) 2006, நவெம்பர் 22 ஆந் திகதியில் இருந்து செலுத்த வேண்டியுள்ளது. இது தொடர்பாக இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது:-

வங்கிகளால் கடன்களை மீளப்பெறுதல் (விசேட ஏற்பாடுகள்) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் 4 ஆம் பிரிவின் நிபந்தனைகளுக்கு அமைய இதற்கான அட்டவணையில் மேலும் வவிரிக்கப்பட்டவாறு குறிப்பிடப்பட்ட 1047 ஆம் இலக்க பிணை மீது வட்டியுடன் செலுத்த வேண்டிய குறிப்பிடப்பட்ட தொகையான முப்பத்து நாலு இலட்சத்து இருபதாயிரத்து அறுநூற்றி எழுபத்து மூன்று ரூபா அறுபத்தி மூன்று சதம் (ரூபா 34,20,673.63) மீளப் பெறுவதற்காக PABC வங்கிக்கு அடைமானம் வைக்கப்பட்ட சொத்தை பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்வதற்கு கண்டி, டொரிங்டன் வீதி, 24 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ஏல விற்பனையாளர்களான திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரம நிறுவனத்தினருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. முன் சொல்லப்பட்டவாறு 2006, நவெம்பர் 22 ஆந் திகதியில் இருந்து இதுநாள்வரை இதற்கான விற்பனை மற்றும் செலவுத் தொகை மற்றும் பணம் ஆகியவற்றை 1990 ஆம் ஆண்டின் வங்கிகளினால் கடன்கள் மீளப்பெறுதல் (விசேட ஏற்பாடுகள் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் மீளப் பெறும் வகையில் இதன் மூலம் நடவடிக்கை மேற் கொள்ளப்படுகிறது."

#### அட்டவணை

மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில் ராயிகம் கோறளையின் உடகஹாபத்து பகுதியில் ஹொரணை பிரதேச சபை எல்லைகளுக்குள்ளான அரகாவில் கிராமத்தில் அமைந்துள்ள "ஹிங்குரான்ஹேன" என்றழைக்கப்படும் நிலப்பகுதியில் அனுமதிபெற்ற நிலஅளவையானர் யூ. திலகா நந்தனியால் ஆக்கப்பட்ட 2001, செத்தெம்பர் 17 ஆந் திகதியிடப்பட்ட 600 ஆம் இலக்க வரைபடத்தில் எல்லை பிரிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட காணிப்பங்கீடு "Lot A" என்ற நிலத் தொகுதியாக குறிக்கப்பட்டுள்ளது. "Lot A" என்று குறிக்கப்பட்ட குறிப்பிட்ட இப் பங்கீட்டு நிலத்தின் எல்லைகளாக - வடக்கு : 600 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள "Lot B" நிலத்தொகுதி மற்றும் ஜே. டி. ஹேமரத்னவால் உரிமை பேணப்படும் காணியும் ; கிழக்கு : எல்லையில் கே. ஏ. ஆனந்தவின் "ஹிங்குரான்ஹேனகும்புர" காணியும் ; தெற்கு ; 492 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள "Lot 5" நிலத்தொகுதியும் (வீதி) 492 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள "Lot 1" நிலத்தொகுதியும் ; மேற்கு : 492 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள "Lot 5" நிலத் தொகுதியும் கே. ஏ. அஜித்தினால் உரிமை கோரப்படும் காணியும் அமைந்துள்ளன. இப் பங்கீட்டு நிலம் மூன்று றூட்கள் எட்டு தசம் எட்டு ஒன்பது பேர்ச்சஸ் (0ஏ. 3றூ. 8.89பே.) நிலப்பரப்பைக் கொண் டுள்ளது. குறிப்பிடப்பட்ட 600 ஆம் இலக்க வரைபடத்தில் "Lot B" நிலத்தொகுதி மீதான வழியுரிமை.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

டி. வருணி எகொடகே,
முகாமையாளர் - சட்டத்துறை.

3-827/2

---

### ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(பாணந்துறை கிளை) - பேதுறுஹேவ லசிதா டி சில்வா

ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் 2007, சனவரி 11 ஆந் தேதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"பேதுறுஹேவ வசிதா டி சில்வா என்பவர் கடப்பாடுடையவராக, ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் சார்பில் பாணந்துறை பிரசித்த நொத்தாரிசு பி. வி. என். டபிள்யு. பெரேரா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003, யூலை 1 ஆந் தேதிய 464 ஆம் இலக்க முறிமீது வருமதியான கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளாராதலாலும், அத்துடன் 2006, ஏப்பிறல் 26 ஆந் தேதியன்று உள்ளவாறாக, ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறிமீது இருபத்தி இரண்டு இலட்சத்து தொண்ணூற்றிரண்டாயிரத்து இருநூற்று நாற்பத்திரண்டு ரூபா எழுபத்தொன்பது சதம் (ரூ. 22,92,242.79) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேருமதியாகவும் உள்ளதாதலாலும், அத்துடன் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணைகளில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 464 ஆம் இலக்க முறி மூலம்

ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 22,92,242.79 பணத்தொகையை 2005, திசெம்பர் 1 ஆந் தேதியிலிருந்து விற்பனை நாள்வரை அதன்மீதான மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றுடனும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏலவிற்பனைகாரர் ஆர். எஸ். மஹாநாம என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளையின், பள்ளே பற்றுவில் மொறட்டுவ நகர சபை எல்லைகளுக்குள் உயன என்னுமிடத்தில் அமைந்துள்ளதும் உயனவீதி 66, 66 1/1 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்டதும் மதங்கஹாவத்தை என அழைக்கப்படுவதுமான காணியிலிருந்து உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எல். எஸ். பர்னாந்து என்பவரால் தயாரிக்கப்பட்ட 1997, சனவரி 21 ஆந் தேதிய 3210 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதிலுள்ள கட்டிடங்கள் மற்றுமெல்லாவற்றுடனும் சேர்த்து அத்துடன் அச்சொல்லப்பட்ட காணித்துண்டு 1 இன் எல்லைகள் - வடக்கு : தனியார் வீதி ; கிழக்கு : குமார் ஜயவர்தனவின் ஆதனம் ; தெற்கு : ஹேமந்த பெரேராவின் ஆதனம் அத்துடன் ; மேற்கு : உயன வீதி. அத்துடன் கல்கிசை காணிப்பதிவகத்தில் M 2224/216 என்னும் தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் சொல்லப்பட்ட 3210 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பன்னிரண்டு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 12பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்) /சபைச் செயலாளர்

3- 828/2

---

## ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின். 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(குளியாப்பிட்டி கிளை) - கருணா பெடிலாகே சுகந்தி பிரியதர்ஷனி

ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் 2007, சனவரி 25 ஆந் தேதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"கருணா பெடிலாகே சுகந்தி பிரியதர்ஷனி என்பவர் கடப்பாடுடையவராக, ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் சார்பில் குருநாகல் பிரசித்த நொத்தாரிசு எஸ். எஸ். ஹேவபதிராண என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, ஓகத்து 24 ஆந் தேதிய 1132 ஆம் இலக்க முறிமீது வருமதியான கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளாராதலாலும், அத்தடன் 2006, ஒற்றோபர் 31 ஆந் தேதியன்று உள்ளவாறாக, ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறிமீது பன்னிரண்டு இலட்சத்துமுப்பத்தையாயிரத்து நானூற்றெண்பத்திரண்டு ரூபா இருபத்துநாலு சதம் (ரூ. 12,35,482.24) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேருமதியாகவும் உள்ளதாதலாலும், அத்துடன் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணைகளில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 1132 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 12,35,482.24 பணத்தொகையை 2006, நவெம்பர் 1 ஆந் தேதியிலிருந்து விற்பனை நாள்வரை அதன்மீதான மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றுடனும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏலவிற்பனைகாரர் என். எச். பி. எவ். ஆரியரத்ன என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம் குளியாப்பிட்டி பதிவுப்பிரிவிற்குள் கட்டுகம்பொல ஹத்பற்றுவில் யகம்புட்டு கோறளையில் இஹல மந்தகொந்தன கிராமத்தில் வெரலுகஸகர என்னுமிடத்தில் அமைந்துள்ளதும் கௌகெல என அழைக்கப் படுவதும் மற்றும் அறியப்படுவதுமான காணியின் அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அச் சொல்லப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் - வடக்கு : வெரலுகஸகரவேவ ; கிழக்கு : அலெக்ஸாண்டர் பெரேரா என்பவரால் உரிமை கோரப்படும் காணி ; தெற்கு : பிரதான வீதி அத்துடன் ; மேற்கு :கே. ஏ. நவாமி என்பவரால் உரிமை கோரப்படும் காணி அத்துடன் இந்த எல்லைகளுக்குள் அரை ஏக்கரளவில் (0ஏ. 2றூ. 0பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி அதிலுள்ள அத்துடன் அதனோடு சேர்ந்த மண், மரங்கள், பயிர்வகைகள், கட்டிடங்கள் மற்றுமெல்லாமும் சேர்த்து. அத்துடன் அச் சொல்லப்பட்ட காணி குளியாபிட்டி மாவட்டக் காணிப்பதிவகத்தில் பிரிவு R, தொகுதி 35, பக்கம் 264 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் அச்சொல்லப்பட்ட காணி தற்போது நிலஅளவைப்பட மொன்றின் பிரகாரம் தற்போது உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். எம். திஸ்ஸநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, ஏப்பிறல் 29 ஆந் தேதிய 1393 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ளது. அத்துடன் இதனெல்லைகள் - வடக்கு : வெரலுகஸகரவேவ ; கிழக்கு : அலெக்ஸாண்டர் பெரேரா என்பவரால் உரிமை கோரப்படும் காணி ; தெற்கு : தும்மலசூரியவிலிருந்து படிவெல என்னுமிடத்திற்குச் செல்லும் நெடுஞ்சாலை அத்துடன் ; மேற்கு : கே. ஏ. நவாமி மற்றும் வேறு ஆட்களால் உரிமை கோரப்படும் காணி.அத்துடன் இந்த எல்லைகளுக்குள் ஒரு றூட் இருபத்தெட்டு பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 28பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்) /சபைச் செயலாளர்

3- 828/1

**வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல. 00115302 8287 - M. R. யஸீன்

2006, திசெம்பர் 21 ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில், வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதாவது :-

"கடப்பாடுடையவரான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, கொழும்பு 10, ஸ்ரீ சத்தர்மா மாவத்தை, இல. 235 இல் வசிக்கும் முகமது ரொஷான் யஸீன் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்திபெற்ற நொத்தாரிசு R. அலகேந்திர அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2005, ஒற்றோபர் 11 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 1109 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியுள்ளாராதலாலும், 2006, ஒற்றோர் 16 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிமூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு இலங்கையில் சட்ட ரீதியாகப் பாவனையிலுள்ள பதின்மூன்று இலட்சத்து நான்காயிரத்து இருநூற்று எண்பத்திரெண்டு ரூபா (ரூ. 13,04,282) கொண்ட தொகை தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும், 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத் தினால் அளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ், வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையானது, சொல்லப்பட்ட தொகை பதின்மூன்று இலட்சத்து நான்காயிரத்து இருநூற்று எண்பத்திரெண்டு ரூபா (ரூ. 13,04,282) ஐ மேலும் 2006, ஒற்றோபர் 17 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதிவரை பதினொரு இலட்சத்து தொண்ணூற்றேழாயிரத்து இருநூற்றிப்பதினாறு ரூபா ஐம்பதாறு சதம் (ரூ. 11,97,216.56) கொண்ட தொகைமீது ஆண்டுக்கு பதின்மூன்று (13%) சதவீத வட்டியுடன் உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இல. 1109 கொண்ட சொல்லப்பட்ட முறிமூலம் வரைறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளதும் இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளதுமான ஆதனங்கள் மற்றும் வளவுகள் கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் I. W. ஜயசூரிய அவர்களால் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது",

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மொரட்டுவ நகர சபை எல்லையினுள், சல்பிட்டி கோறளை இன் பள்ளே பத்துவில் மொரட்டுவ, இடம என்னுமிடத்தில் எவ்லின் டி. சொய்ஸா ரோட், வரிமதிப்பீட்டு இல. 69 இல் அமைந்துள்ள "கெமிங்கரு தொட்டுபொலபொட பக்மீகஹவத்த" என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் K. R. S. பொன்சேகா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1997, யூன் 20 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 1403 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 2 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதுடன், மேலும் காணிக்கு உரிய வழி உரிமை மற்றும் சகல வசதிகளுடன் மேற்கூறப்பட்ட துண்டு 2 இன் எல்லைகளாவன - வடக்கு : L. J. மெபிதஸ் டி சில்வாவுக்குச் சொந்தமான சொத்து ; கிழக்கு : W. W. ஜோன் வில்சன் மென்டிஸ் அவர்களுக்குச் சொந்தமான இந்தக் காணியின் ஒரு துண்டு; தெற்கு ; நிலஅளவை வரைபடம் இல. 54 இல் துண்டு A மற்றும் ; மேற்கு : எவ்லின் டி சொய்ஸா ரோட் மற்றும் நிலஅளவை வரைபடம் இல.1402 இல் துண்டு 1 என்பவையாகும். மேற்கூறப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 1403 இற்கமைய இந்தக்காணி பதினைந்து தசம் ஒன்று இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 15.12பே.) விஸ்தீரணமுடையது.

நிலஅளவை வரைபடம் இல. 1403 இல் குறிப்பிடப்பட்டுள்ள மேற்கூறப்பட்ட துண்டு 2 கீழ் கூறப்படும் காணியின் ஒரு மீள் அளவையாகும். மொறட்டுவ இடம என்னுமிடத்தில் எவ்லின் டி சொய்ஸா ரோட், வரிமதிப்பீட்டு இல. 38 இல் அமைந்துள்ள "கெமிங்கரு தொட்டுபொலபொட பக்மீகஹவத்த" என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் J. M. R. பெர்னாந்து அவர்களால் தயாரிக்கப்பட்டு 1942, யூன் 11 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 54 இல் குறிப்பிடப்பட்டு துண்டு B என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள மற்றும் சகலதுடன், மேலும் இந்தக் காணிக்குரிய வழி உரிமைகள் மற்றும் சகல வசதிகளுடன் மேற்கூறப்பட்ட துண்டு B இன் எல்லைகளாவன - வடக்கு : லிந்தமுலகே ஜோன் மெடுதஸ் டி சில்வாவுக்குச் சொந்தமான காணி ; கிழக்கு : வர்ணகுலசூரிய வடுமெஸ்ரிகே ஜோன் வில்சன் மென்டிறுக்குச் சொந்தமான காணி ; தெற்கு ; துண்டு A என அடையானமிடப்பட்ட இந்தக் காணியின் ஒரு துண்டு மற்றும் ; மேற்கு : லிந்தமுலகே ஜேம்ஸ் சில்வாவுக்குச் சொந்தமான காணி மற்றும் எவ்லின் டி சொய்ஸா ரோட் என்பவையாகும். மேற்கூறப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 54 இற்கமைய இந்தக்காணி பதினேழு தசம் ஒன்று இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 17.12பே.) விஸ்தீரணமுடையது. கல்கிஸை காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் M 2287/159 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

3-843/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.